**ஜனவரி - 31**

**"சாந்த குணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி சாந்த குணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்." - சங் 25 : 9**

உன்னதத்திலிருந்து ஞானத்தை அடைய வேண்டுமென விரும்புவோருக்கு இத்தகைய சாந்த குணம் அவசியம் தேவை. தங்களிடத்தில் தாழ்மை கட்டாயம் இருத்தல் வேண்டும். தங்களிடத்தில் பலகுறைகள் உண்டு என்பதினை ஏற்றுக்கொள்ள வேண்டும். தங்களிடத்தில் ஞானம் தேவனைப்பற்றிய அறிவு போதாது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படியாக தங்கள் மனதைத் தாழ்த்தி குறைகளை ஏற்றுக்கொள்வோருக்குத் தேவன் தமது ஞானத்தை கொடுக்கப் பிரியமுள்ளவராக இருக்கிறார். இத்தகைய தாழ்மை என்னும் சுபாவம் இல்லையேல், இலவசமாகவும் உற்சாகத்தோடும் தேவ ஞானத்தைப் பெறுவது கூடாத காரியம். யாருடைய சிந்தனைகளும் நோக்கங்களும் இக்காலத்தில் தேவனுக்கு உகந்ததாக இருக்கிறதோ அவர்களுக்குத் தேவன் தமது ஞானத்தைக் கொடுக்கிறார். ஒரு திடமான மனதைப் பெறவும் அடிப்படையாகத் தேவைப்படுவது சாந்த குணமே. சாந்த குணம் படைத்தவர்கள் ஏற்றதோர் உள்ளத்தைப் பெற்றிருப்பார்கள். இது அவர்களை நியாயமாகவும் நயமாகவும் பாரபட்சம் இன்றி தங்கள் பகுத்தறிவைப் பயன்டுத்தி செயல்பட உதவும். முதலில் நாம் நம்மைத் தாழ்த்த வேண்டும். நமக்குள் மனத்தாழ்மை இல்லையேல், இவை ஒன்றும் நமக்குக் கிடைப்பதில்லை. ஆகவே கிறிஸ்துவைப்பற்றியோ அவருடைய மனதையோ நாம் அறிய வேண்டுமென்றால், நமக்கு முதலில் மனத்தாழ்மை அவசியம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். **- Z ’00, 68 (R 2585).**

ஒருவர் பிறரால் தனக்குப் போதனை வேண்டுமென்றால், மனத்தாழ்மை அவருக்கு மிகவும் அவசியம். தேவனைப்பற்றி அவர் போதிக்கப்பட வேண்டுமென்றால், மனத்தாழ்மை மிகவும் தேவைப்படும். தங்களைத் தாங்களே வெறுமையாக்கியவர்களுக்கு மாத்திரமே அவர்களுடைய உள்ளத்தில் தேவ சிந்தனையால் நிரப்ப முடியும். அப்படி தங்களை வெறுமையாக்கும் போது தான், அவர்கள் அறிவைப்பெற ஆயத்தப்படுகிறார்கள். அந்தத் தெய்வீக அறிவு மனித ஞானங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது. ஏதெனில் அவர்களுக்குத் தேவன் தாமே பெரிய உபாத்தியாயராக இருப்பார். அவருடைய ஞானம் எல்லாவற்றையும் அரவணைக்கும். **- P ’34, 189.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சங் 22:26; 37:11; 76:8,9; 147:6; 149:4; பிர 10:4; ஏசா 11:4; 29:19; செப் 2:3; மத் 5:5,38-42; 11:29; 1கொரி 6:7; 2கொரி 10:1; கலா 6:1; எபே 4:1,2; கொலோ 3:12,13; 2தீமோ 2:24,25; 1பேது 3:4.

**கோபுர வாசிப்பு :** Z 13, 381 (R 5370).

**வினாக்கள் :** இந்த வாரத்தில் இந்த வசனத்தின் சம்பந்தமான அனுபவம் என்ன? அவை எவ்வாறு சரிக்கட்டப்பட்டன? அவை எதில் முடிந்தன?